


# மிகவும் பாதுகாப்பான கார் வாங்குவதற்கான கையேடு

புதிய கார்களை வாங்க விற்பனை நிலையங்களுக்கு செல்லும் முன் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள்:

## கன்ஸ்யூமர்ஸ் இண்டர்நேஷனல் (CI) பற்றி

கன்ஸ்யூமர்ஸ் இண்டர்நேஷனல், 120 நாடுகளில் 240 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நுகர்வோர் நிறுவனங்களுடன் ஒன்றாக இணைந்து, எல்லா இடங்களிலும் தக்க பாதுகாப்பு மற்றும் அதிகாரத்தை நுகர்வோர்களுக்கு வழங்கக்கூடிய சக்தி வாய்ந்த சர்வதேச இயக்கம் ஆகும்.

நாம் எல்லோரும் ஒன்றாக இணைந்து நுகர்வோர்கள் பாதுகாப்பாகவும், மேன்மையாகவும், நேர்மையாகவும் நடத்தப்படுகிறார்கள் என்பதை உறுதி செய்கிறோம்.

நுகர்வோர்களை உலக தரம் வாய்ந்த பாதுகாப்பு இயக்கங்களான ஐ.நா சபை, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (Organization for Economic Cooperation and Development OECD) மற்றும் இருபது நாடுகளின் கூட்டமைப்பின் ((G20)) பார்வையில் கொண்டு செல்ல நாங்கள் பாடுபடுகிறோம்.

கன்ஸ்யூமர்ஸ் இண்டர்நேஷனல் இலாப நோக்குடைய நிறுவனம் அல்ல, மேலும் இது இங்கிலாந்தில் இயங்கும் பதிவு பெற்ற நிறுவனம் (நிறுவன பதிவு எண் 4337865). மேலும் இங்கிலாந்து தொண்டு நிறுவனமாகவும் பதிவு பெற்றுள்ளது (எண் 1122155)


மொழிபெயர்ப்பு - கன்ஸ்யூமர்ஸ் அசோஷியேஷன் ஆ்ப் இந்தியா

மேலும் விபரங்களுக்கு www.consumersinternational.org என்ற இணையதளத்தினை பார்க்கவும்.

வெளியீடு

கன்ஸ்யூமர்ஸ் இண்டர்நேஷனல்
24, Highbury crescent
இலண்டன், N5, IRX, UK

# முன்னுரை:

ஒரு புதிய கார் வாங்குவது என்பது அனைவருக்கும் ஒரு பெரிய முதலீடு ஆகும். எனவே அந்த முதலீட்டில் ஈடுபடுவதற்கு முன்னர், காரின் செயல்பாடு, நடைமுறை விலை போன்ற அனைத்து விவரங்களையும் அறிந்து கொண்டு தான் கார் வாங்க செல்வீர்கள். ஆனால் பாதுகாப்பு என்பது மிகவும் அவசியம் என்பதை மறந்து விடாதீர்கள். பாதுகாப்பு அம்சங்கள் ஒரு காரில் கட்டாயம் இருக்க வேண்டும். பாதுகாப்பான கார் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினரின் பாதுகாப்பிற்கும் மிகவும் அவசியமாக ஒன்றாகும். அனைத்து கார்களும் அவற்றின் பாதுகாப்பு அம்சங்களும் ஒரே மாதிரியானவை என்று கூற முடியாது. கார் வாங்க செல்லும் முன் நாம் அறிந்து கொள்ள வேண்டிய பாதுகாப்பு அம்சங்களைப் பற்றியும் நம் கேட்டு அறிந்து கொள்ளக் கூடிய கேள்விகளைப் பற்றியும் விளக்குவதே இந்த கையேடு ஆகும். பாதுகாப்பு அம்சங்கள் குறித்துக் கட்டாயம் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தியே இந்த கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான காரினை வாங்க இந்த கையேடு உங்களுக்கு மிகவும் உதவும்.

## நுகர்வோர்களுக்கான பாதுகாப்பு உரிமை

நுகர்வோர் பாதுகாப்பு உரிமை ஒரு உலகளாவிய உரிமையாகும். ஐக்கிய நாடுகளின் அறிவிப்பின்படி அனைத்து நாடுகளிலும் உள்ள வாகனங்களுக்கு குறைந்தபட்ச பாதுகாப்பு தரம் இருக்க வேண்டும் . சாலை பாதுகாப்பு பற்றிய ப்ரெஸிலிய பிரகடனத்தை ஐ.நா. ஏப்ரல் 2016 இல் ஏற்றுக் கொண்டு, மற்ற அரசாங்கங்களையும் பின்பற்ற ஊக்குவித்தது.

கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் ஏற்பினையுடைய, ஐக்கிய நாடுகள் வாகன பாதுகாப்பு கட்டுப்பாடுகள் அல்லது அதற்கு சமமான தேசிய தரம் உறுதி செய்யப்பட்ட, புதிய மோட்டார் வாகனங்ளில், குறைந்தபட்ச கட்டுப்பாடுகளை சந்திக்க, வாகன பயணி மற்றும் சாலை பயனர் பாதுகாப்பு கட்டுப்பாடுகள், இருக்கை பெல்ட்கள், காற்றுப் பைகள் மற்றும் ஆண்டி லாக் பிரேக்கிக் சிஸ்டம் (anti-lock braking system (ABS) மற்றும் மின்னணு உறுதிக் கட்டுப்பாடு (Electronic Stability Control (ESC))போன்றவை பொருத்தப்பட வேண்டும். இது ப்ரேசிலியா பிரகடனம் . OP20

துரதிர்ஷ்டவசமாக, உலகத்திலுள்ள பல நாடுகள், இன்னும் வாகன பாதுகாப்பு கட்டுப்பாடுகளை போதிய அளவு செயல்படுத்தவில்லை. தனி நபர்கள் வாகனங்களை வாங்கும்போது போதிய அளவு பாதுகாப்பு சாதனங்கள் உள்ளதா என உறுதி செய்ய வேண்டும்.

## கருத்தில் கொள்ள வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள்

கார் பாதுகாப்பு அம்சங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன அவை:

- விபத்துக்களை முன் கூட்டியே தடுக்க உதவுபவை(முதன்மை பாதுகாப்பு அம்சங்கள்)
- விபத்து ஏற்படுகையில் காயங்கள் அல்லது மரணங்களை தடுக்க அல்லது குறைக்க உதவுபவை(இரண்டாம் நிலை அம்சங்கள்)

# முதன்மை பாதுகாப்பு அம்சங்கள்




## 1 Electronic Stability Control (ESC) எலக்ட்ரானிக் ஸ்டெபிலிட்டி கன்ட்ரோல்

ESC என்பது கார்களில் விபத்துக்களை தவிர்ப்பதற்காக பயன்படுத்தப்படும் ஒரு முதன்மை சாதனமாகும். இந்த ESC சாதனத்தை கார்களில் பயன்படுத்திய பிறகு மூன்றில் ஒரு பங்கு விபத்துக்கள் குறைந்துள்ளதாக ஆய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளன. ஐரோப்பாவில் இது அமைக்கப்பட்ட பிறகு 6100பேரின் மரணம் தவிர்க்கப்பட்டுள்ளது.

கார் ஓட்டுநர்கள் தங்களின் கட்டுப்பாட்டினை இழந்தாலோ அல்லது கார் திடீரென திசை மாறி பயணித்தாலோ இந்த ESC அமைப்பு காரின் ஓட்டத்தில் சிறு சிறு தடைகளை ஏற்படுத்தி காரை ஒரு நிலைத்தன்மைக்கு கொண்டு வந்துவிடும். காரின் சக்கரங்களில் உள்ள Sensors எனும் கருவி இவ்வாறு நிகழும் போது ஒவ்வொரு காரின் சக்கரங்களிலும் ஒரு வித பிரேக் அமைப்பினை உண்டாக்கி கார்களை தானாகவே ஒரு நிலைத்தன்மைக்கு கொண்டு வந்து காரின் கட்டுப்பாட்டினை மீண்டு கொண்டு வந்துவிடும்.

இந்த அமைப்பு முறைக்கே ESC எனப் பெயர். ஆனால் ஒவ்வொரு நிறுவனத்திலும் இந்த அமைப்பிற்கான பெயர்கள் மாறுபடலாம். முறையே ESP, ESC, ASC, DSC, VSC, VSA என்ற பல பெயர்களில் இவை அழைக்கப்படலாம். நீங்கள் கார் வாங்கும் போது கார் டீலரிடம் இந்த அம்சங்கள் காரில் உள்ளதா என கேட்டு அறிந்து கொண்ட பின்னர் கார் வாங்குவது சிறந்ததாகும்.


## 2 Electronic brake-Force distribution (EBD) எலக்ட்ரானிக் பிரேக் ஃபோர்ஸ் டிஸ்ட்ரிபியூஷன்



எலக்ட்ரானிக் பிரேக் ஃபோர்ஸ் டிஸ்ட்ரிபியூஷன் எனும் இம்முறை தானாகவே ஒவ்வொரு சக்கரத்திற்கும் எவ்வளவு பிரேக் கொடுக்க வேண்டும் என அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு காரின் வேகத்தினை அளிக்கும். சாலையின் தரம், வாகனத்தின் வேகம், டயர்களில் ஏற்படும்


அழுத்தம் ஆகியவற்றை பொறுத்து அனைத்து சக்கரங்களுக்கும் ஒரே விதமான பிரேக் தேவைப்படாது. எலக்ட்ரானிக் பிரேக் ஃபோர்ஸ் டிஸ்ட்ரிபியூஷன் இந்த அமைப்பு முறை காரினை வெகு விரைவிலேயே நிறுத்தி, பாதுகாப்பானதாகவும், ஒரே திசையில் பயணம் செய்யவும் உதவுகிறது.

## 3 Brake assist (BA) பிரேக் அசிஸ்ட்



பிரேக் அசிஸ்ட் எனும் இம்முறை ஓட்டுனர்கள் அவசர கால பிரேக்கை அழுத்தும் போது வாகனம் ஓட்டுபவர்களுக்கு சாதகமாக செயல்படும். சோதனைகளில் சாதாரணமாக வாகனம் ஓட்டுபவர்கள் பிரேக் பெடலினை முழுமையாக பயன்படுத்துவதில்லை இந்த சாதனம் அவசர காலத்தில் ஏற்படுத்த வேண்டிய தடையை வாகனம் ஓட்டுபவர்களுக்கு செய்து கொடுக்கிறது.


## 4 தன்னிச்சையான அவசர நிறுத்த மற்றும் மோதல் தவிர்ப்பு அமைப்பு



AEB எனும் இச்சாதனத்தில் கேமராக்களும், ரேடார்களும் பொருத்தப்பட்டு எதிரே உள்ள பொருட்களினால் சேதம் ஏற்படுமானால் அதனை உணர்த்தும். சில கார்களில் ஒலி/ஒளி மூலம் இந்த செய்தி ஓட்டுநருக்கு தெரிவிக்கப்படும். விபத்து ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டாலோ அல்லது ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்தாலோ இந்த AEB பிரேக்கை தயார் நிலைக்கு கொண்டு வந்து விடும். AEB முழுமையாக பொருத்தப்பட்டுள்ள சில கார்களில் வண்டியை தானாகவே நிறுத்தி விடும். ஒரு முழுமையான AEB யால் 38% விபத்துகள் குறைய வாய்ப்புள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# இரண்டாம் நிலை பாதுகாப்பு அம்சங்கள்

## 1 சீட் பெல்ட்கள்



“சீட் பெல்ட்கள்“ வாகனத்தின் முன் பகுதி/ பின்பகுதியில் பயணம் செய்பவர்கள்/ ஓட்டுநர்களின் உயிரை காப்பாற்றும். கட்டாயம் இந்த சீட் பெல்ட்களை அணிய வேண்டும். சீட் பெல்ட்டினை அணியாவிட்டால் உயிரிழப்பு இரண்டு மடங்காகும் குறைந்த தூர பயணமானாலும், நெடுந்தூர பயணமானாலும் இவற்றைக் கட்டாயம் அணிவது அவசியம். ஏனெனில் விபத்து எந்த நேரத்திலும் ஏற்படலாம். சீட் பெல்ட்களை சரியாக அணிந்து கொண்டால் விபத்து ஏற்படும் ஆபத்தை தவிர்க்கலாம்.

சீட்பெல்ட்கள் அணிவதன் மூலம் கடுமையான விபத்துக்கள் மற்றும் காயங்களை தவிர்க்க முடிகிறது. தற்போதைய காலத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் சீட் பெல்ட்கள் தங்கள் செயல்திறனில் மாற்றங்களை ஏற்படுத்தி கார் ஓட்டுபவர்களுக்கு வசதியாக அமைகின்றன. அவற்றில் உள்ள Pre- tensioner  ஏதேனும் விபத்துக்கள் ஏற்பட்டால் சீட் பெல்ட்டினை இழுத்து அவற்றிற்கு ஒருவித இறுக்கத் தன்மையினை உண்டாக்கி ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைக்க உதவுகின்றன. Load limiters என்ற சாதனம் பெல்ட்டை சிறிது நீட்டிக் கொள்ள உதவி, பயணம் செய்பவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் பாதுக்காக்கிறது.



## 2 Air Bags
## ஏர் பேக்ஸ்

Air Bags  சாதனங்கள் பெரிய விபத்து ஏற்படும் சூழ்நிலைகளை தவிர்க்க உதவுகிறது. வாகனத்தின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள Sensor கள் வாகனத்தின் ஓட்டத்தினை நிர்வகித்து விபத்து ஏற்படும் சமயத்தில் Air Bags ஐ வெடிக்க செய்து வாகனம் ஓட்டுபவர்களுக்கும்/ பயணம் செய்பவர்களுக்கும் பாதுகாப்பினை அளிக்கிறது.

ஒரு வாகனத்தில் அதிகபட்சமாக எவ்வளவு Air Bags இருந்தாலும் அவை நல்லது தான். முன்பகுதியில் உள்ள Air Bags நேருக்கு நேர் ஏற்படும் மோதல்களை தவிர்க்கின்றன. பக்கவாட்டில் உள்ள Air Bags மார்பு, வயிறு மற்றும் இதர பகுதிகளை விபத்தில் இருந்து பாதுகாக்கின்றன. ஒரு சில வகை Air Bags காரின் மேல் பகுதியில் இருந்து கீழே இறங்கி பயணம் செய்பவர்களின் தலையில் ஏற்படக்கூடிய ஆபத்தினை தவிர்க்கின்றன. அண்மைக் காலத்தில் கால் மூட்டு பாதுகாப்பிற்காகவும் Air Bags வந்துள்ளன.

மிகவும் நவீனமான இரட்டை நிலை Air Bags நிறைய உள்ளன. இந்த இரட்டை நிலை Airbags யில் Sensorகள் உள்ளன. அவை விபத்து ஏற்படும் சூழ்நிலைக்கேற்றவாறு வேகமாகவும், மெதுவாகவும் வெடிக்கும் தன்மை கொண்டது. சில நேரங்களில் Air Bags வேகமாக வெடிப்பதினாலேயே அந்த அதிர்ச்சியில் காயங்கள் ஏற்படக் கூட வாய்ப்புகள் உள்ளன.



# 3 தலைப் பாதுகாப்பு

Whiplash காயங்கள் ஏற்படாமல் தடுக்க இவை வடிவமைக்கப்பட்டுள்ளண. இந்த அமைப்பு முறை சரியாக செயல்பட வேண்டுமெனில், தலைக்கேற்றவாறு சரியான உயரத்தில் இவை அமைக்கப்பட்டிருக்க வேண்டும். பயணம் செய்பவர்களின் தலைப் பகுதியிலிருந்து சுமார் ஒரு இன்ச் தொலைவில் வசதியாக வடிவமைக்கப்பட்டிருக்கும். இதனால் தலை, கழுத்து பகுதிகள் மற்றும் whiplash காயங்கள் போன்றவற்றை தடுக்க இயலும்.

# நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விஷயங்கள்:

கார் விற்பனையாளர்கள் கூறுவதை மட்டுமே நம்பி கார்களை வாங்க வேண்டாம். சில நேரங்களில் அவர்கள் உண்மைக்கு புறம்பான பல கருத்துக்களை கூற நேரிடலாம். ஆகவே கார் வாங்க செல்லும் முன் ஒவ்வொரு காரின் பாதுகாப்பு அம்சங்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

## NCAP சோதனை ஓட்டத்தின் முடிவுகள்:

Global NCAP எனப்படும் இயக்கம் உற்பத்தி செய்து தயாராகி வெளிவரும் கார்களை சோதனை செய்து அவற்றின் பாதுகாப்பு அம்சங்களை மதிப்பிட்டு பட்டியலை தயார் செய்கிறது.

இந்த பட்டியலால் கார் ஓட்டுபவர்களுக்கும் வெளியே நடப்பவர்களுக்கும் பாதுகாப்பு சூழ்நிலை ஏற்படும்.

இவ்வியக்கம் ஒவ்வொரு காருக்கும் கீழ்க்கண்ட தரத்தின் அடிப்படையில் நட்சத்திர அந்தஸ்தினை அளிக்கிறது.(5 நட்சத்திரம் பெற்ற கார்கள் மிகவும் தரமானதாக கருதப்படுகின்றன)

சோதனையில் முன்பகுதி/பின்பகுதி மற்றும் Whiplash காயங்கள் போன்றவற்றிற்கான பாதுகாப்பு அம்சங்கள் இடம் பெற்றிருந்தால்

குழந்தைகளுக்கான பாதுகாப்பு: குழந்தைகளுக்கு முன்பகுதி மற்றும் பக்கவாட்டில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை பாதுகாத்து பல வடிவங்கள் மற்றும் அளவுகளிலும் தயாரிக்கப்படும் பாதுகாப்பு அம்சங்கள் இருந்தால்

காரின் முன்பகுதி / Bonnet மற்றும் பக்கவாட்டில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களால் எதிரே நடந்து வருபவர்களுக்கு தலை, மார்பு மற்றும் பிற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஆபத்தை தடுக்கும் வசதிகள் இருந்தால்

வாகன ஓட்டுநருக்கு தேவையான அனைத்து பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் காயங்களை தடுக்கும் அனைத்து உபகரணங்களும் இருந்தால்

Global NCAP என்பது பல நாடுகளில் தனது கிளைகளை கொண்டுள்ளது. ஆனால் இந்தியாவில் இதற்கு கிளைகள் இல்லை. இதற்கு பதிலாக The Bharath New Vehicle Safety Assessment Programme (BNVSAP) என்ற பெயரில் சில வருடங்களில் இந்தியாவில் இவ்வமைப்பினை நிறுவ உள்ளது. இந்திய வாகனங்களை மதிப்பீடு செய்து அவற்றிற்கான தர மதிப்பினை இவை அளிக்க உள்ளது.

மேலும் Global NCAP நிறுவனம் Institute of Road Traffic Education (IRTE) வுடன் இணைந்து இந்தியாவிற்கான பாதுகாப்பான வாகன பிரச்சாரத்தினை மேற்கொள்ள உள்ளது. இதன் மூலம் இந்தியாவில் ஒரு வருடத்தில் 1,30,000 வரை சாலை விபத்துகளினால் ஏற்படக்கூடிய மரணங்களை குறைப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.

இது தவிர சென்னையில் உள்ள கன்ஸ்யூமர்ஸ் அசோஸியேஷன் ஆஃப் இந்தியா தொடர்ந்து (www.caiindia.org) இணையதளம் வாயிலாக வாகன பாதுகாப்பு தொடர்பான செய்திகள் மற்றும் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.



# கள ஆய்வு

விஜயநகரில் வசிக்கும் திரு. ஆரிஃப் அவருடைய Hyundai i10 காரில் பயணம் செய்யும் போது எதிரே வந்த நாயை காப்பாற்ற வேண்டி காரை திருப்பும் போது அது அருகிலிருந்த ஒரு பள்ளத்தில் விழுந்தது. அவருடைய சகோதரருக்கு கண்களில் பலத்த அடிப்பட்டு பல மாதங்கள் சிகிச்சை பெற வேண்டி வந்தது. இந்த விபத்தினால் அவர்களுடைய மொத்த குடும்பமும் விபத்தால் அதிர்ச்சிக்குள்ளானது. அவர்களுடைய சொந்த கிராமத்தில் இருந்த பலரும் வந்து விபத்துக்குள்ளானவரை சந்தித்தனர். இதற்கு பின்னர் பின் சீட்டில் உட்காருவது என்றாலே அனைவரும் தயக்கம் காட்டினர். நாட்டுக்கு நாடு இது போன்ற பாதுகாப்பு சாதனங்கள் வேறுபடுவது ஏன் என்று ஆரிஃபிற்கு புரியவில்லை. “எல்லோருக்கும் இரத்தம் ஒன்றாக இருக்கையில் அவர்களுடைய பாதுகாப்புக்கு ஏன் வேறு வேறு நிலை ஏற்படுகிறது, மற்ற நாடுகளில் இருக்கும் பாதுகாப்பு அம்சங்கள் ஏன் நம் நாட்டில் இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பது புதிராகவே இருக்கிறது என கூறுகிறார்

**“எல்லோருக்கும் இரத்தம் ஒன்றாக இருக்கையில் அவர்களுடைய பாதுகாப்புக்கு ஏன் வேறு வேறு நிலை ஏற்படுகிறது, மற்ற நாடுகளில் இருக்கும் பாதுகாப்பு அம்சங்கள் ஏன் நம் நாட்டில் இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பது புதிராகவே இருக்கிறது“ என கூறுகிறார்**

# கார்களை வாங்க விற்பனை நிலையங்களுக்கு செல்லும் முன் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியவைகள்:

1. எச்சரிக்கையாக இருங்கள்: பாதுகாப்பு அம்சங்கள் விளம்பரத்தில் கூறப்பட்டுள்ளவாறு மலிவான கார்களில் இருக்காது என தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு தேவையான பாதுகாப்பு அம்சங்களை முன்னரே தெரிந்து வைத்துக் கொண்டு நீங்கள் வாங்கப் போகும் கார்களில் அவை உள்ளனவா என விற்பனையாளரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்

2. குழப்பமடையாதீர்கள்:விற்பனையாளர்கள் கூறும் அதிநவீன வார்த்தைகள் உங்களுக்கு புரியாவிட்டால் அது பற்றி விற்பனையாளர்களை விளக்க சொல்லுங்கள். இது உங்கள் உயிரைக் காப்பாற்றும் செயலாகும்.

3. கார் வாங்க செல்லும் போது உங்கள் குழந்தைகளின் ஏற்கனவே பயன்படுத்திய கார் சீட்களை உடன் எடுத்து சென்று புதிய காரில் அவை பொருந்துகிறதா என சரிப் பார்க்கவும்.

4. நீங்கள் வாங்க நினைக்கும் கார் மற்றும் அதன் அனைத்து அம்சங்களை குறித்து கார் விற்பனையாளரிடம் விளக்கம் அளிக்க கூறி அதனை எழுத்து வடிவில் எழுதி வாங்கி கொள்வது மிகவும் சிறந்த முறையாகும்.




5. கார் வாங்கும் நடவடிக்கைகளில் சோதனை ஓட்டம் ஒரு முக்கிய அம்சமாகும். நீங்கள் காரின் பயணம் செய்யும் போது இருக்கைகள், தலைப் பாதுகாப்பு ஆகியவை உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஏற்ற வகையில் பொருத்தமானதாக உள்ளதா என பார்த்துக் கொள்ளுங்கள்.

காரை ஓட்டும் போது அவை உங்கள் கட்டுப்பாட்டில் உள்ளதா, உங்கள் பாதுகாப்பிற்கு ஏற்றதா என்பதை உறுதி செய்து கொண்ட பின்னரே காரை வாங்க முன் வாருங்கள்

பாதுகாப்பிற்கு இணை ஏதும் இல்லை என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

# குழந்தைகளின் கார் இருக்கை:

குழந்தைகளுக்கான காரின் பிரத்யேக இருக்கைகள் அவர்களின் பாதுகாப்பிற்கு மிகவும் முதன்மையானது ஆகும். ஆகவே சரியான கார் இருக்கையினை வாங்கிப் பொருத்திக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும். இவ்வகை இருக்கைகள் குழந்தைகளின் எடைக்கும் வயதுக்கும் தக்கவாறு கிடைக்கின்றன. ஆகவே உங்கள் குழந்தைகள் வளர வளர இருக்கையின் தன்மையினை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

| | |
|---|---|
|  | **Group 0/0+**<br>பின்புறம் பார்த்து<br>13கி<br>0-15 மாதங்கள் |
|  | **Group 1**<br>முன்புறம் பார்த்து<br>9&18கி<br>9 மாதம் முதல்- 4 வயது வரை |
|  | **Group 2**<br>முன்புறம் பார்த்து<br>15&25கி<br>3-6 வயது வரை |
|  | **Group 3**<br>முன்புறம் பார்த்து (அ) Booster Cushion<br>13-35கி<br>5-11 வயது வரை |

இந்த எடை விபரங்கள் ஒவ்வொரு குழுவிற்கும் கலந்து  வருவதால் உங்கள் குழந்தைகள் அதிகப்பட்ச எடையை நெருங்கும் வரை அந்த பகுதியிலேயே இருக்க செய்யவும். பின்புறம் பார்த்து குழந்தையை உட்கார வைக்கும் போது ஏதேனும் காரில் உரசல்கள் (அ) விபத்து ஏற்படுகையில் குழந்தைக்கு பலத்த காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. குழந்தையின் இருக்கைகளை வாங்குகையில் அது சரியாக வண்டியில் பொருந்துகிறதா என பார்க்கவும். இது போலவே நீங்கள் உபயோகிக்கும் மற்ற கார்களிலும் பொருந்துகிறதா என தெரிந்து கொள்ள வேண்டும். சில தயாரிப்பாளர்கள் தங்களது இணைய தளங்களில் அவர்களது கார்களின் இருக்கைகள் எந்தெந்த கார்களுக்கு பொருந்தும் என்ற விவரங்கள் தரப்படுகின்றன. எனவே இவற்றை படித்து அறிந்து கொள்ளுங்கள். ஒரு குழந்தைக்கு மேல் பயணம் செய்வது எனில் அனைத்து இருக்கைகளும் சரியாக பொருத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

உங்கள் காரில் Isofix mountings பொருத்தப்பட்டுள்ளதா என்பதை பார்த்துக் கொள்ளுங்கள். Isofix mountings என்பது சீட் பெல்ட்டை பயன்படுத்தாமல் காரின் இருக்கையில் பொருத்தப்படும் ஒரு சாதனமாகும். அவற்றில் உள்ள 3 பொருத்திகள் அவற்றை இருக்கைகளுடன் இணைக்கின்றன. Isofix இருக்கைகள் பாதுகாப்பிற்கு மிகவும் அத்தியாவசியமானதாக இல்லாவிட்டாலும் குழந்தைகளின் இருக்கைகளில் அவை எளிதாக பொருந்திவிடுவதால் குழந்தைகளுக்கு ஆபத்து நேரிட வாய்ப்புகள் குறைவு.

காரின் இருக்கைகளை வாங்கும் போது பயன்படுத்திய இருக்கைகளை வாங்காதீர்கள். ஏனெனில் அவை மிகவும் பழுதானதாக இருக்கக் கூடும்.





# கள ஆய்வு

புது டெல்லியில் வசிக்கும் திரு. ஹர்விந்தர் சிங் என்பவரின் 5 உறவினர்கள் ஒரு திருமண நிகழ்ச்சிக்காக அவர்களுடைய Maruti Ritz வண்டியில் பயணம் செய்யும் போது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து கார் ஒரு சாக்கடைக்குள் விழுந்து 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்ற 3 பேரில் ஒருவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு 64 தையல்கள் போடப்பட்டன. மேலும் ஒருவருக்கு கைகளில் பலத்த அடிப்பட்டு அவரது கைகள் மீண்டும் செயல்படாமலேயே போகும் நிலை ஏற்படலாம்.

இரண்டு மரணங்களை சந்தித்த இந்த குடும்பம் மற்றவர்களின் மருத்துவ செலவுக்காக மிகவும் கஷ்டப்பட நேரிட்டது. அதே சமயம் இறந்தவர்களின் வருமானமும் நின்று போனது. இது குறித்து ஹர்விந்தர் சிங் கூறுகையில், ‘சாதாரண மனிதர்கள் உபயோகப்படுத்தும் மலிவான கார்களிலும் இது போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் கட்டாயமாக்கப்பட வேண்டும். இதற்கு அரசு சரியான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றார்

**இது குறித்து ஹர்விந்தர் சிங் கூறுகையில், ‘சாதாரண மனிதர்கள் உபயோகப்படுத்தும் மலிவான கார்களிலும் இது போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் கட்டாயமாக்கப்பட வேண்டும். இதற்கு அரசு சரியான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்” என்றார்**

# சுருக்கம்:

**புதிய கார் வாங்கும் போது நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய பாதுகாப்பு அம்சங்கள்:**

- நீங்கள் எதிர்பார்க்கும் காரில் உள்ள முக்கிய பாதுகாப்பு அம்சங்களை தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.
- கார் வாங்க செல்லும் முன் NCAP போன்றவற்றின் இணையதளங்களுக்கு சென்று காரின் சோதனை முடிவுகளைப் பற்றி தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்
- கார் விற்பனையாளரைச் சந்திக்கும் போது காரின் பாதுகாப்பு அம்சங்களை பற்றி முழுமையாகக் கேட்டு அறிந்து கொண்டு அந்த காரினை சோதனை ஓட்டத்திற்கு ஈடுபடுத்தி அந்த கார் உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்தினருக்கும் முற்றிலும் பாதுகாப்பானது என்று தெரிந்த பின்னரே காரை வாங்குங்கள்.
- குழந்தைகளுடன் பயணம் செய்கையில், அவர்களின் வயதுக்கேற்றவாறு கிடைக்கும் இருக்கைகளை வாங்கிப் பொருத்திக் கொள்ளுங்கள்.



Global Office (London)

24 Highbury Crescent
London N5 1RX
United Kingdom

Consumers International is a not-for-profit company limited by guarantee, registered in England and Wales (No. 4337865) and a registered charity (No. 1122155)

@consumers_int

/consumersinternational

Consumersinternational.org

அக்டோபர் 2016